**சார்பு நீதிமன்றம், வந்தவாசி , திருவண்ணாமலை மாவட்டம்.**

முன்னிலை- திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் நாள் வியாழக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 12-ஆம் நாள்.)

**அசல் வழக்கு எண். 12/2025**

(CNR.No. TNTM23000871/2024)

ரேணுகா ........ வாதி

//எதிர்//

1. ஏழுமலை
2. நடராஜ்
3. அப்பாவு
4. சேகர்
5. பவி ....... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 12.02.2026 அன்று என் முன்னர் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P.ராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராக தவறிய காரணத்தால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டு வாதியின் வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்,

## தீர்ப்புரை

இவ்வழக்கு தாவா சொத்துக்கள் வாதிக்கு உரிமையானது என்று விளம்புகை செய்ய கோரியும், தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் வாதிக்கு சுவாதீனம் அளித்திட உத்தரவு பிறப்பிக்க கோரியும் தாவா செலவு தொகைக்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையில் சுருக்கம்:-**

**2.1)** தாவா ஷெட்யூல் சொத்து ஆதியில் தேவகி என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றும், தேவகி ஆண்டு அனுபவித்து வந்து 03.06.2004 ம் தேதியில் மாதவன் மனைவி வசந்தா கிரையம் பெற்று கிரைய தேதியிலேயே சுவாதீனம் பெற்று ஆண்டு அனுபவித்து வந்து அரசுக்கு தீர்வை செலுத்தி பட்டா பெயர் மாற்றம் செய்து ஆண்டு அனுபவித்து வந்த நிலையில் வாதி 17.06.2019 ம் தேதியில் வசந்தாவிடம் கிரையம் பெற்று அதே தேதியில் சுவாதீனம் அடைந்து வாதி தாவா சொத்தினை வேர்கடலை, உளுந்து, பயிர் செய்து ஆண்டு அனுபவித்து வந்ததாகவும், இந்நிலையில் வாதிக்கு நோய் வாய்பட்டு சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததால் அங்கேயே தங்கிவிட்டதாகவும், இதனை சாதகமாக்கிக்கொண்ட பிரதிவாதிகள் தாவா சொத்தினை ஆக்கிரமித்துக்கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

2.2) மேற்படி விவரம் அறிந்த வாதி தாவா கிராமத்திற்கு வந்து பிரதிவாதிகளின் செயலை கண்டு பிரதிவாதிகளின் ஆக்கிரமணம் பற்றி கேட்டபோது தகுந்த பதிலேதும் கூறவில்லை என்றும், பிரதிவாதிகளின் அத்துமீறலை பஞ்சாயத்தாரிடம் முறையிட்டும் பிரதிவாதிகள் பஞ்சாயத்திற்கும் கட்டுப்படாமல் கடந்த ஆண்டு தாவா

சொத்தில் தங்களது சொத்து தான் நாங்கள் தான் பயிர் செய்வோம் என வாதியை மிரட்டி தாவா சொத்தில் 2021ம் ஆண்டில் குழிபோட்டு நீலகிரிதைல மரங்கள் நடவு செய்துவிட்டதாகவும், வாதி பிரதிவாதிகளின் சட்டவிரோத செயல் குறித்து காவல் துறையில் முறையிட்டும், காவல்துறைனர் சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றத்தினை நாடி பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்திவிட்டதாகவும், வாதிக்கு வேறு வழி தெரியாமல் பிரதிவாதிகளின் சட்டவிரோதமான ஆக்கிரமிப்பினை தடுத்து நிறுத்த முடியாமலும் தனது சொத்துக்களை சட்டத்தின் மூலம் பாதுகாத்துக்கொள்ளவும் சரியான தீர்ப்பாணை பெறுவதற்கும் தாவா சொத்து வாதிக்கு உரிமையானது என உரிமையை விளம்புகை செய்ய கோரியும், தாவா சொத்தினை பிரதிவாதிகள் வாதிக்கு சுவாதீனம் அளித்திட கோரியும், தாவா செலவுத்தொகைகளை பிரதிவாதிகள் வாதிக்கு கட்டிக்கொடுக்க வேண்டும் என கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

03.) பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராக தவறியதால் தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

04.) வாதிகள் தரப்பில் 1வது வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதி தரப்பில் வா.சா.2 ஆக கோவிந்தன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு

செய்யப்படவில்லை. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>05. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா? என்று தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது</u>**.

(i) இவ்வழக்கு தாவா சொத்துக்கள் வாதிக்கு உரிமையானது என்று விளம்புகை செய்ய கோரியும், தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் வாதிக்கு சுவாதீனம் அளித்திட உத்தரவு பிறப்பிக்க கோரியும் தாவா செலவு தொகைக்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தன்னுடைய வழக்குரையில் தாவா சொத்து ஆதியில் தேவகி என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றும், தாவா சொத்துக்களை தேவகி ஆண்டு அனுபவித்து வந்து கடந்த 03.06.2004 தேதியில் மாதவன் மனைவி வசந்தா என்பவருக்கு கிரையம் கொடுத்ததாகவும், மேற்படி வசந்தாவிடமிருந்து வாதி கடந்த 17.06.2019 தேதியன்று தாவா சொத்துக்களை கிரையம் பெற்று அனுபவித்து வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் வாதிக்கு நோய்வாய்பட்டு அவர் சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததால் அதை சாதகமாக பயன்படுத்திக்கொண்ட பக்கத்து நிலத்துக்காரரான பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை ஆக்கிரமித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து வாதி காவல்துறையிடம் புகார் அளித்தபோது அவர்கள் உரிய நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளும்படி கூறியதால் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

(ii) வாதி தரப்பு வழக்கை நிரூப்பிக்கும் பொருட்டு வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.ஆ. 1 ஆவணம் 24.01.2019 தேதியிட்ட வசந்தா என்பவரிடமிருந்து வாதி தாவா சொத்துக்களை கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலாகும். வா.சா.ஆ. 2 ஆவணம் வசந்தா என்பவர் தேவகி என்பவரிடமிருந்து தாவா சொத்துக்களை கிரையம வாங்கியதற்கான 03.06.2004 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் ஆகும். தாவா சர்வே எண்.95/10 க்கு மாதவன் மனைவி வசந்தா என்பவரின் பெயரில் உள்ள பட்டா எண்.859 க்கான கணினி பட்டா வா.சா.ஆ.3 ஆகும். தேவகி என்பவர் பெயரில் உள்ள தாவா சர்வே எண்.92/8 க்கான பட்டா எண்.485 ன் கணினி பட்டா வா.சா.ஆ.4 ஆகும். தாவா சொத்திற்கான தேவகி என்பவர் பெயரில் உள்ள வரி ரசீதுகள் வா.சா.ஆ.5 ஆகும். தாவா சொத்திற்கான வில்லங்க சான்றுகள் வா.சா.ஆ.6 ஆகும். தாவா சொத்துக்களுக்கு வசந்தா என்பவரின் பெயரில் உள்ள வரி ரசீதுகள் வா.சா.ஆ.7 ஆகும். மேலும் தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டவை என்பதை நிரூபிப்பதற்கு வாதி தரப்பில் வா.சா.2 கோவிந்தன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். எனவே வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகியோரின் சாட்சியங்களின் மூலமும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்களின் மூலமும் வாதி தரப்பு வழக்கை நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே வாதி கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**இறுதியாக,**

(1) இவ்வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்துகள் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டவை என்று விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகின்றது.

(2) மேலும் இத்தீர்ப்பு தேதியிலிருந்து இரண்டு மாத காலகொடுவிற்குள் பிரதிவாதிகள் தாவா சொத்துக்களின் சுவாதீனத்தை வாதியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26-ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டடது.

SARANYA S Digitally signed by SARANYA S Date: 2026.03.26 17:56:23 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி.

வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி:

வா.சா.1 - ரேணுாக (வாதி)

வா.சா.2 - கோவிந்தன்

வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் :

| வ.எண். | தேதி | விபரம் | ஷரா |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 24.01.2019 | கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 03.06.2004 | கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | – | பட்டா எண்.859 | கணினி நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.4 | – | பட்டா எண்,485 | கணினி நகல் |
| வா.சா.ஆ.5 | – | வில்லங்க சான்று | அசல் |
| வா.சா.ஆ.6 | – | தேவகி பெயரில் உள்ள வரி ரசீதுகள் | அசல் |
| வா.சா.ஆ.7 | – | வசந்தா பெயரில் உள்ள வரி ரசீதுகள் | அசல் |
| வா.சா.ஆ.8 | – | வாதியின் ஆதார் அட்டை | ஒப்பிடப்பட்ட நகல் |

பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.03.26 17:56:30 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.